அரண் பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்
ARAN International e-Journal of Tamil Research

அரண்

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

(Peer Reviewed Journal Multidisciplinary)
ISSN: 2582-399X



**காலாண்டு இதழ்
(ஜனவரி, ஏப்ரல், ஜூலை, அக்டோபர்)
ஆகிய மாதங்களில் வெளிவரும்**

Vol:8 Issue :31 July 2026
கோட்டை:8 வாயில்:31 ஜூலை 2026

அரண்

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

Aran

International e Journal of Tamil Research

EDITORIAL BOARD

Founder / Editor in Chief

Dr PRIYAKRISHNAN

Publisher

MR P. JAYAKRISHNAN

Editorial Board Members

Dr V SELVAKUMAR

Professor And Head of The Department of Maritime History and Marine Archaeology Tamil University, Thanjavur, TamilNadu, India

Dr. Ravindran A/L Maraya

Head of Department & Senior Lecturer, Department of Indian Studies (DIS), Universiti Malaya, Kuala Lumpur, Malaysia.

Dr Silllalee A/L S.Kandasamy

Senior Lecturer, Department of Indian Studies, Universiti Malaya,

Dr. S. KAVITHA

School of Indian Languages and Comparative Literature,Tamil University, Thanjavur. TamilNadu, India

Dr.K.DAYANIDHI

Assistant Professor & Head i/c , Department of Vaishnavism , University of Madras, TamilNadu, India.

Copy Right @ Aran international e journal of Tamil Research/Dr. Priyakrishnan

அரண்

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

Aran

International e Journal of Tamil Research

EDITORIAL BOARD

Dr O.MUTHIAH

Professor of Tamil, The Gandhigram Rural Institute (Deemed to be University)
Gandhigram - 624 302 Dindigul District, TAMIL NADU

DR UMADEVI

Professor In Tamil, Department of Modern Indian Languages And
Literery Studies University of Delhi,Delhi.

DR JAGADEESAN.T.

Assistant Professor of Tamil, Department of Indian Languages,
Faculty of Arts, Banaras Hindu University,
Varanasi- 221005, Uttar Pradesh,India.

DR SENTHIL PRAKASH.S

Teacher – in- charge/Assistant professor (SG),Department of
Tamil, Institute of Languages, Literature& culture,
Visva – Bharathi University,Santiniketan,West
Bengal, India -731235

DR R TAMILSELVAN

Assistant professor, Aligarh Muslim University, Uttar Pradesh,India-202002

Dr SWARNAVEL ESWARAN

Associate Professor Departments of English, and Media and Information
Michigan State University. USA.

Dr (Ms.) NILANKA LIYANAGE

Senior Lecturer in Dance ,Department of Dance,Drame&Theatre Arts,
Swamy Vipulananda Institute of Aesthetic Stidies,
Eastern University Srilanka

அரண்

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

Aran

International e Journal of Tamil Research

EDITORIAL BOARD

Mrs THULSIVANTHANA UDAYASHANKAR

Senior lecturer Gr II in English, Swamy Vipulananda Institute of Aesthetic Stidies ,Eastern University, Srilanka

Dr B. DHANANJAYAN

Associate Professor, Sir Theagaraya College, Old Washermenpet, Chennai - 600 021.

Dr P.SEKAR

Assistant Professor,Department of Education,Govt.Institute of Advanced Study in Education,Saidapet,Chennai-600015.

நிறுவனர்/பதிப்பாளர்/நிர்வாக ஆசிரியர்

இதழாக்கம்

திரு ப. ஜெயகிருஷ்ணன்

முதன்மை ஆசிரியர்

முனைவர் பிரியாகிருஷ்ணன்

+917299587879

www.aranejournal.com

aranjournal@gmail.com

அரண் பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழில் வெளிவரும் ஆய்வுக்கட்டுரைகள் அனைத்தும் (Peer Review)பீர் ரிவியூ செய்யப்பட்டு பதிவு செய்யப்படுகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

தமிழ்

தொல்காப்பியப் பொருளதிகாரத்தில் படிமம்

Imagery in the Porulathikaram of Tolkappiyam

முனைவர் மூ. பாலகிருஷ்ணன், இணைப்பேராசிரியர், தமிழ்த்துறை, தொலைக்கல்வி மற்றும் இணையவழிக் கல்விமையம், பாரதிதாசன் பல்கலைக்கழகம், திருச்சிராப்பள்ளி -620 024.

Dr.M. Balakrishnan, *Associate professor of Tamil, Centre for Distance and Online Education, Bharathidasan University, Tiruchirappalli -620 024. Orcid id: https://orcid.org/0009-0007-1678-9949*

Abstract

Tolkāppiyam, written by Tholkāppiyar, is a grammatical treatise in Tamil. It is regarded as the finest grammatical work composed in the Tamil language. Although it is primarily a grammar text, it is structured with the elegance and beauty of a literary work. The clarity of its organization and the techniques embedded within it contribute to its aesthetic appeal. Many literary devices are skillfully employed in this work. Among them, imagery is particularly noteworthy. Tolkāppiyar has presented several words through imagery. He has used imagery in describing the names of the thinai (landscape-based poetic categories) and also in explaining certain other words. This article aims to identify and analyze those words that have been expressed through imagery.

Key Words: *Tolkappiyar, Tolkappiyam, Image, Kurinji, Mullai, Marutham, Neithal, Palai*

ஆய்வுச் சுருக்கம்

தமிழில் தொல்காப்பியரால் எழுதப்பட்ட இலக்கணநூல் தொல்காப்பியமாகும். தமிழில் படைக்கப்பட்ட ஆகச்சிறந்த இலக்கணநூல் தொல்காப்பியமாகும். இது ஒரு இலக்கண நூலாக இருந்தாலும் இலக்கியம்போல் நயம்பட அமைந்துள்ளது. தொல்காப்பியம் நயம்பட அமையக் காரணம் அதனுடைய தெளிவான அமைப்பு முறையும் அதனுள் உட்பொதியாக அமைந்துள்ள உத்திகளும் ஆகும். இ;நூலுள் பல உத்திகள் சிறப்புற அமைந்திருக்கின்றன. அவற்றுள் குறிப்பிடத்தக்கது படிமமாகும். தொல்காப்பியர் பல சொற்களைப் படிமமாக்கியுரைத்துள்ளார். திணைப்பெயர்களைப் படிமமாக்கியுள்ளார். அதனோடு சில சொற்களையும் படிமமாக்கியுள்ளார். அச்சொற்களைக் கண்டறிந்து ஆய்வதாக இக்கட்டுரை அமைகிறது.

திறவுச் சொற்கள் - படிமம், குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை, மட்கலம், அமிழ்தம்

முன்னுரை

தமிழின் தொன்மையையும் மேன்மையையும் பறைசாற்றுவதில் முக்கியப் பங்காற்றுவது தமிழில் படைக்கப்பட்ட இலக்கியங்களாகும். இத்தகைய இலக்கியங்கள் கற்போரை மனங்கொள்ள வைக்க உத்திகளைக் கொண்டிலங்கும். இவை இலக்கியத்தின் சுவையை மேம்படுத்தும். பாடுபொருளின் நுட்பங்களைப் புலப்படுத்தும். அவ்வகையில் தமிழில் தொல்காப்பியரால் படைக்கப்பட்ட தொல்காப்பியம் ஆகச்சிறந்த இலக்கண நூலாக இருந்தாலும் இலக்கிய நயம் விரவி இன்பம் பயக்க அமைந்துள்ளது. இலக்கியம் போன்று தொல்காப்பியம் பல உத்திகளைத் தன்னகத்தே கொண்டுள்ளது. அவ்வுத்திகளில் தொல்காப்பியத்தில் இடம்பெற்றுள்ள படிமம் குறித்து ஆய்வதாக இவ்வாய்வுக்கட்டுரை அமைகிறது.

படிமம்

படிமம் (Image) என்ற சொல் இலத்தீன் சொற்களான இமேகா (Imaga), இமித்திரை (Imigre) ஆகிய சொற்களிலிருந்து உருவாகி Image என்ற ஆங்கிலச் சொல்லாகியது. இதன் தமிழ்வடிவமே படிமம் என்ற சொல்லாகும். கண்ணால் காண்பதை உள்ளத்தில் காட்சிப்படுத்தி உருவத்தை நிறுத்தும் கண்ணாடியாக விளங்குவது படிமமாகும்.

ஏதேனும் ஒன்று பிறிதொன்றாக நிற்பது, பிறிதொன்றினைப் பிரதிபலித்துக் காட்டுவது, விரும்பப்பட்ட ஏதாவது ஒரு கருத்து வடிவத்திற்கு விளக்கம் தருவதற்குச் செய்யப்படும் மனத்தின் மொழிபெயர்ப்பு என்று படிமத்திற்குப் பல்வேறு விளக்கங்கள் தரப்படுகின்றன.

“இருபொருள் ஒப்பீட்டின் விளைவாகத் தெளிவானதோர் அகக்காட்சியை அளிப்பதே படிமம். ஒப்பீடு பொருத்தமானதாக இருக்கவேண்டும். படிமத்தில் கையாளப்படும் சொற்கள் இரண்டு பொருள்களுக்கும் பொதுவான பண்புகளை, இயல்புகளைக் குறிப்பிடும் வகையில் அமையவேண்டும். படிமத்தின் நோக்கம் இலக்கியத்தை அழகுபடுத்துவதாக அமையாமல் கவிஞனின் கவியுள்ளத்தைப் புலப்படுத்துவதாகத் திகழவேண்டும். வாசகர்களின் உள்ளத்தில் புதிய பல சிந்தனைகளைத் தூண்டிவிடும் ஆற்றலுடையதாக விளக்கவேண்டும்” என்று படிமம் குறித்த தனது கருத்தைப் பதிவுசெய்துள்ளார் சி.இ. மறைமலை.

“ஐம்புலன்களால் உணரப்படும் பொருள்களின் மூலம் வெளிவரும் புலன்களின் வெளிப்பாடு படிமம் எனவும் கூறலாம். ஒரு கருத்தைச் சொல்வதற்கு அதற்குரிய பொருளைப் பற்றிய சிந்தனைகளைப் படிப்போர்க்கு உண்டாக்கி அதன் வடிவமும் கருத்தும் தோன்றுமாறு செய்வது படிமம்” என்று படிமத்திற்குப் பிறிதொரு விளக்கமளிப்பார்;.

இலக்கியத் திறனாய்வாளர்கள் தரும் விளக்கங்கள் வாயிலாகப் படிமம் என்பது உவமை, உருவகம் என்பதன் அகலமும் ஆழமும் கொண்டதோர் உணர்த்துநிலை என்பதை அறியமுடிகிறது. இலக்கியப்பயிற்சியின் அனுபவத்தால் முன்னைச் சான்றோர் தமிழர்தம் சிந்தனை மரபுகளைப் பல படிமங்களாகத் தம் இலக்கியங்களிலும் இலக்கணங்களிலும் பதிவுசெய்துள்ளனர். இதற்குச் சான்றாக

~தமிழ் என்பதை அகத ;திற்குப் படிமமாக முன்னைச் சான்றோர் கொண்டதைக் கூறலாம். ~ஆரிய அரசன் பிரகத்தனுக்குத் தமிழ் அறிவுறுத்தியது எனக் குறிஞ்சிப்பாட்டுக்குத் தரப்பட்ட பண்டைக்குறிப்பின் மூலம் இதனை உணரலாம். இதுபோன்று தமிழ் இலக்கிய, இலக்கணப் பரப்பில் படிமங்கள் பல பரவலாகக் காணப்படுகின்றன.

குறிஞ்சி

குறிஞ்சி என்பது ஒரு பூக்கும் மலர் இனத்தைச் சார்ந்த தாவரமாகும். இது மலர் என்பதை மட்டும் உணர்த்தாமல், புணர்தல் என்ற உரிப்பொருளை உணர்த்தி, குறிஞ்சி என்ற நிலப்பகுதியையும் சுட்டி நிற்கிறது. இது 12 ஆண்டுகளுக்கு ஒருமுறை மலரும் பூவாகும். இதனைக் குறிஞ்சியொழுக்கமாகிய இயற்கைப்புணர்ச்சியுடன் பழந்தமிழர் தொடர்புபடுத்தியுள்ளனர். பெண்கள் 12 வயதில் பூப்பெய்துவது உடலியல் அமைப்பின்படி பொதுவாக நிகழ்வதாகும். “பூப்பெய்திய பின்னர் பெண்கள் இல்லற வாழ்க்கைக்குப் பக்குவப்படுகிறார்கள் என்ற இயற்கை உண்மையை உணர்ந்து குறிஞ்சி மலரை இயற்கைப்புணர்ச்சிக்குப் படிமமாகக் காட்டியுள்ளனர் பழந்தமிழர்கள்” என்று ஏ.கே. இராமானுஜன் குறிப்பிடுகிறார். “குறிஞ்சி என்ற பெயர் குறுகுதல் உறுதிப்படுதல் என்ற பொருளமையப் பெற்றுள்ளது என்பர் அறிஞர்.;” இங்கே குறிஞ்சி என்பதனைப் தொல்காப்பியர் படிமமாக்கி உரைத்துள்ளார்.

முல்லை

முல்லை என்பது கார்காலத்தில் பூக்கும் ஒரு மலர்த் தாவரமாகும். இது இருத்தல் ஒழுக்கத்தையும், காடு எனும் நிலத்தையும், கருப்பொருட்களையும் காட்சிப்படுத்திப் படிமமாகிறது. “முல்லை என்பது கார்காலத்துப் பூக்;கும் மலர். அக்காலத்து வருவதாகச் சொல்லிவிட்டுப்போன தலைவனுக்கும், அக்காலம்வரை தலைமகன் வரவுக்காகப் பொறுமையோடு காத்திருந்த தலைவிக்கும் அம்முல்லை மலர்கள் நாட்காட்டிபோல் காலத்தை உணர்த்தும் கருவிகளாகின்றன. காலப்போக்கில் குறித்த காலத்தில் வருதல், மகிழ்தல் போன்ற கற்பு வாழ்க்கைக்கு துணைபுரிந்து, பின்னர் முல்லை என்றாலே கற்பு எனப் பொருள்படுமளவு அவை வளர்ச்சி பெற்றன. முல்லை என்ற பருப்பொருள் இருத்தல் என்ற உரிப்பொருளை, காத்திருக்கும் கற்பு வாழ்வை, நுண்பொருளைக் குறிப்பதாயிற்று. எனவே ஏதேனும் காரணத்தினால் தொடர்புபடுத்தப்பட்டுப் பிறகு ஒன்று மற்றொன்றைக் குறிக்கும் நிலைக்கு வளரும்போது படிமமா கிறது” என்று முல்லைப் படிமமாக மாறிய திறத்தைத் தமிழண்ணல் விளக்குகிறார்.

மருதம்

மருதம் என்பது செந்நிற மலர்கள் பூக்கும் மரமாகும். இது மருதமரம் எனப்பெயர் பெறும். இங்கே மருதம் என்பது மருதமரத்தைக் குறிக்காமல் ஊடல் என்ற உரிப்பொருளையும், வயலையும், வயற்பரப்பில் காணப்படும் கருப்பொருட்களையும் மனக்கண்ணுள் உருவக்காட்சியாக்கிப் படிமமாக அமைந்துள்ளது.

நெய்தல்

நெய்தல் என்பது கொடி இனத்தைச் சார்ந்த பூக்கும் தாவரமாகும். அகப்பொருள் இலக்கணங்கள் சுட்டும் நெய்தல் என்பது கொடியை மட்டும் குறிக்கவில்லை. எல்லையற்ற கடற்பரப்பையும், ஓ வென்ற அலைகளின் இரைச்சலையும், தனிமையையும், புலால் நாற்றத்தையும் பிற கருப்பொருள்களையும் காட்சிப்படுத்துகின்ற படிமமாக அமைந்துள்ளது.

தலைவி : மட்கலம்

களவொழுக்கத்தில் நின்றொழுகின்ற தலைவி, தலைவன்மேல் கொண்ட விருப்பத்தினை நேரிடையாகக் கூறமாட்டாள் என்ற செய்தியை எடுத்துரைக்கும்போது படிமத்தை அமைத்து உரைத்துள்ளார் தொல்காப்பியர்.

புதிய மண்பானையில் ஊற்றப்பட்ட நீர் புறத்தே கசிவதுபோன்று தலைவியின் உணர்வானது மெய்யின் வழியே வெளிப்படும் என்கிறார் தொல்காப்பியர். இதனை,

"தன்னுறு வேட்கை கிழவன் முன்கிளத்தல்
எண்ணும்காலை கிழத்திக்கு இல்லை
பிறநீர் மாக்களின் அறிய ஆயிடைப்
பெய்ந்நீர் போலும் உணர்விற்று என்ப"

(களவியல் நூற்பா:27)

என்ற நூற்பா காட்சிப்படுத்திக் காட்டியுள்ளது. தலைவியின் வேட்கை உணர்வைப் புலப்படுத்துவதற்குப் புதிய மட்கலத்துள் நீர்கசிவதை ஒப்பிட்டுக் காட்சிப்படுத்தி படிமமாக அமைந்து சிறக்கிறது.

அடிசில் : அமிழ்தம்

கற்புக்காலத்தில் தலைவனுக்குக் கூற்று நிகழிடங்களைக் குறிக்கும் தொல்காப்பியர்,

"ஏனது சுவைப்பினும் நீகை தொட்டது
வானோர் அமிழ்தம் புரைமால் எமக்கு
அடிசிலும் பூவும் தொடுத்தற் கண்ணும்"

(கற்பியல் நூற்பா:8)

என்று உரைத்துள்ளார். இந்நூற்பாவில் அடிசிற் சுவைக்கு ஒப்பாக அமிழ்தச் சுவையைக் கூறி படிமமாக உரைத்துச் சிறப்பித்துள்ளார்.

விண்ணெழுத்து : குற்றம்

நுண்பொருளையும் உணர்வையும் ஒப்புமைப்படுத்திக் காட்சிப்படுத்துவதே படிமமாகும். அவ்வகையில் தொல்காப்பியர் தலைவனின் கூற்றுக்களைக் களவியல் பகுதியில் எடுத்துரைக்கும்போது,

"அந்தரத்து எழுதிய எழுத்தின் மான
வந்த குற்றம் வழிகெட ஒழுக்கம் "

(களவியல் நூற்பா.5)

எனும் நூற்பாவைச் சுட்டியுள்ளார். இந்நூற்பாவில் ஆகாயத்தில் எழுதும் எழுத்து அழிந்துவிடுவதுபோல, களவுக்காலத்தில் மறைந்து ஒழுகின குற்றம், கற்புக் காலத்தில் அழிந்து ஒழிந்துவிடும் எனத் தொடர்புபடுத்தி ஆகாயஎழுத்தைப் படிமமாக அமைத்துள்ளார்.

முடிவுரை

ஒரு மொழியின் செவ்விய தன்மையைப் படம்பிடித்துக் காட்டுவதில் படிமங்கள் முக்கியப் பங்கு வகுக்கின்றன. அந்த அடிப்படையில் தொல்காப்பியர் ஐந்திணைகளில் முல்லை, குறிஞ்சி, மருதம், நெய்தல் ஆகியவற்றை முதன்மையான படிமங்களாக படைத்தளித்துள்ளார். இதனோடு தலைவியின் உணர்வுகளை புதுமட்கலத்துள் பெய்யப்படுகிற நீருக்கு ஒப்பாகவும், அடிசில் சுவைக்கு அமிழ்தச் சுவையை ஒப்பாகவும், மறைந்தொழுகின்ற களவொழுக்கத்திற்கு ஒப்பாக அந்தரத்து எழுத்தையும் காட்சிப்படுத்திப் படிமத்தை அமைத்துள்ளார் தொல்காப்பியர்.

துணை நூற்பபட்டியல்

1.இளம்பூரணர் (உ.ஆ), தொல்காப்பியம் - பொருளதிகாரம், திருநெல்வேலி தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை. மறுபதிப்பு — 2001.

2.சி.இ.மறைமலை, புதுக்கவிதையில் முப்பெரும் உத்திகள,; திருமகள் நிலையம், சென்னை-1986.

3.அரங்க.சுப்பையா, இலக்கியத் திறனாய்வு: இசங்கள், கொள்கைகள், பாவை பப்ளிகேஷன்ஸ், சென்னை -2022.

4.தமிழண்ணல், தொல்காப்பியரின் இலக்கியக்கொள்கைகள், மீனாட்சி புத்தக நிலையம், மதுரை -2004

5.ச.வே.சுப்பிரமணியன், இளங்கோவின் இலக்கிய உத்திகள், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை -1984

6.அ.ச.ஞானசம்பந்தன், இலக்கியக்கலை, கழக வெளியீடு சென்னை -1958

7.மு.வரதராசன். இலக்கியத்திறன், பாரிநிலையம், சென்னை -1957

Refernces

1. *Ilampuranar (Commentary Author), Tolkāppiyam — Porulatikāram, South India Saiva Siddhanta Works Publishing Society, Chennai. Reprint, 2001.*

2. *C. E. Maraimalai, The Three Major Techniques in Modern Tamil Free Verse (Pudukkavithai), Thirumagal Nilayam, Chennai, 1986.*

3. *Aranga Subbiah, Literary Criticism: Schools and Theories, Paavai Publications, Chennai, 2022.*

4. *Tamilannal, The Literary Principles of Tolkāppiyar, Meenakshi Book Stall, Madurai, 2004.*

5. *S. V. Subramanian, The Literary Techniques of Ilango, International Institute of Tamil Studies, Chennai, 1984.*

6. *A. C. Gnanasambandan, The Art of Literature, Kazhaga Veliyidu, Chennai, 1958.*

7. *Mu. Varadarasan, Literary Competence, Pari Nilayam, Chennai, 1957.*

ARAN International e-Journal of Tamil Research

அரண்

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

அறிவிப்பு / Announcement

அன்பான தமிழ்ச் சொந்தங்களே

வணக்கம்.

வரும் 2026, அக்டோபர் மாதம் வெளிவரும் அரண் பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழுக்கான ஆய்வுக் கட்டுரைகள் ஆய்வாளர்களிடமிருந்து வரவேற்கப்படுகின்றன.

கட்டுரை வந்து சேர வேண்டிய கடைசி நாள் - அக்டோபர் 10. அதற்கு பின் வரும் கட்டுரைகள் அக்டோபர் இதழில் இடம்பெறாது என்பதை தெரிவித்துக் கொள்கிறோம்.

www.aranejournal.com